# ஐங்குறுநூற்றில் களவு கற்புக்குரிய மெய்ப்பாடுகள்

# Kalavu Karpu Meipadugal in Aingurunuru

**முனைவர் அ.ரேவதி**, உதவிப்பேராசிரியர், கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முத்துப்பேட்டை - 623523, இராமநாதபுரம் மாவட்டம்

**Dr A.Revathi,** Assistant Professor, Department of Tamil, Caussanel College of Arts and Science Muthupettai – 623523, Ramanathapuram

DOI : 10.5281/zenodo.6536483

## Abstract

The realisation of the feelings that appear to be true. It is exposed by the type of personification. The feelings of the realisation occur in the heart. It is used to explain the conditions in which they appear in both coexistence and genealogy, as well as in the form of stolen realms such as visual realms, appetising realms, in-house realms, and narratives such as divine mail, flair spraying, ill-drying, love and loss of consciousness, and divisiveness.

## ஆய்வுச் சுருக்கம்

மெய்யின்கண் தோன்றும் உணர்வுகளை மெய்ப்பாடு என்று கூறுவர். அது பிறர்க்குப் புலப்படுத்தும் வகையால் வெளிப்படும். மெய்ப்பாட்டின் உணர்வுகள் உள்ளத்தில் நிகழ்வதாகும். தொல்காப்பியர் மெய்ப்பாடுகள் அவை தோன்றும் நிலைக்களன்களை அகவாழ்வு, புறவாழ்வு இரண்டிலும் மெய்ப்பாடு தோன்றும் இடங்களையும் களவுக்குரிய மெய்ப்பாடுகளான காட்சிக்குரிய மெய்ப்பாடுகள், வேட்கைக்குரிய மெய்ப்பாடுகள், உள்ளுதலுக்குரிய மெய்ப்பாடுகள், நாணுவரை இறத்தலுக்குரிய மெய்ப்பாடுகள் என்றும், கற்பிற்குரிய மெய்ப்பாடுகளான தெய்வம் அஞ்சல், புரையறந் தெளிதல், இல்லது காய்தல், அன்பு தொகா நிற்றல், பிரிவாற்றாமை போன்ற நிலைகளில் தோன்றும் மெய்ப்பாடுகளை விளக்கிக் கூறுவதாக அமைகின்றது.

**Keywords :** களவு, கற்பு, மெய்ப்பாடுகள், தொல்காப்பியர், ஐங்குறுநூறு, வேட்கை, காட்சி

## முன்னுரை

மெய்யின்கண் தோன்றும் உணர்வுகளை மெய்ப்பாடு என்று கூறுவர். அது பிறர்க்குப் புலப்படுத்தும் வகையால் வெளிப்படும். மெய்ப்பாட்டின் உணர்வுகள் உள்ளத்தில் நிகழ்வதாகும். அது முகம், காது, கால், கை, வாய், உடல் முதலியவற்றின் அசைவு, துடிப்பு, நடுக்கம், நிலைமாற்றம், தடுமாற்றம், மயக்கம், மகிழ்வு, கிளர்ச்சி, துள்ளல் ஆகியவற்றால் பிறர் அறியத் தோன்றும் என்பர். காப்பியக் கவின் மெய்ப்பாட்டில் தான் உள்ளது. தொல்காப்பியர் மெய்ப்பாடுகள் அவை தோன்றும் நிலைக்களன்கள் அகவாழ்வு, புறவாழ்வு இரண்டிலும் மெய்ப்பாடு பெறுமிடம் தலைமகட்கு ஆகாத மெய்ப்பாடுகள் என்னும் நிலைகளில் விரிவாகக் குறிப்பிடுகின்றார். இந்த வகையில் தொல்காப்பியர் வரையறை செய்துள்ள மெய்ப்பாடுகளான களவுக்குரிய கற்புக்குரிய மெய்ப்பாடுகள் ஐங்குறுநூற்றில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மெய்ப்பாடு எண்ணிக்கை**

நாடகத்தினின்றும் பெறப்பட்ட கோட்பாடே மெய்ப்பாடாகும். மெய்ப்பாட்டியலின் முதல் மூன்று நூற்பாக்களில் நாடகத்தினின்றும் இலக்கியத்திற்கு மாறும் பொழுது மெய்ப்பாட்டில் ஏற்படும் ஒரு வேறுபாடு உணர்த்தப்படுகிறது.

**"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நானான்கு என்ப"** **(தொல்.பொருள். மெய்.நூ.1)**
**"நாலிரண்டாகும் பாலுமாருண்டே"** **(தொல்.பொருள். மெய். நூ2)**
**" நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப "** **(தொல்.பொருள். மெய். நூ.3)**

"பண்ணை என்பதற்கு விளையாட்டு ஆயத்தின்கண் தோன்றியது"[1] என்ப இளம்பூரணர். "முடியுடை வேந்தரும், குறுநில மன்னரும் முதலானோர் நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் நுகரும் இன்ப விளையாட்டினுள்"[2] தோன்றுவது என்பர் பேராசிரியர்.

"இளம்பூரணர் கருத்தின்படி எள்ளல், இளமை முதலாக எட்டுச் சுவைக்கும் கூறப்பட்ட முப்பத்திரண்டு வகைகளும் எண் சுவையும் எண் குறிப்பும் எனப் பதினாறாகும். சுவை பற்றிய மனக்குறிப்புப் புறத்தே புலனாதலின் அதனை சுவையுளடக்கி எட்டெனவும் படும்"[3] என்று கூறுகிறார்.

"பேராசிரியர் கருத்தின்படி சுவைக்கப்படும் பொருள் அதனை நுகரும் பொறியுணர்வு அதனால் சுவை போல் உள்ளத்தில் நுகரும் குறிப்பு, புறத்தாக்குப் புலனாகா வெப்பமும் விறல் அல்லது மெய்ப்பாடு என ஒவ்வொரு சுவையும் நான்கு நான்காகக் கருதப்படும். சுவை எட்டும் இந்நான்குடன் உறழ முப்பத்திரண்டாகும். பேராசிரியர் கருத்துப்படி மனக் குறிப்பாகிய சுவையுணர்வே அடிப்படையாகும்"[4] என்பதை அறிய முடிகின்றது.

**மெய்ப்பாட்டு அடிப்படைகள்**

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டு மெய்ப்பாடுகளும் நான்கு நான்கு அடிப்படைகளை உடையன.

| | | |
|---|---|---|
| **நகை** | - | **எள்ளல், இளமை, பேதமை, மடன்** |
| **அழுகை** | - | **இழிவு, இழவு, அசைவு, வறுமை** |
| **இளிவரல்** | - | **மூப்பு, பிணி, வருத்தம், மென்மை** |
| **மருட்கை** | - | **புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்** |
| **அச்சம்** | - | **அணங்கு, விலங்கு, கள்வர், தம் இறை** |
| **பெருமிதம்** | - | **கல்வி, தறுகண்மை, புகழ், கொடை** |
| **வெகுளி** | - | **உறுப்பறை, குடிகோள், அலை, கொலை** |
| **உவகை** | - | **செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு** |

என 32 மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

முற்காட்டிய மெய்ப்பாடுகளைத் தவிரப் பிரிதொரு முப்பத்திரண்டு வகையையும் தொல்காப்பியர் கூறுகின்றார். அவை, உடைமை, இன்புறுதல், நாணுதல், துஞ்சல், அரற்றுதல், கனவு காணுதல், முனிதல், நினைதல், கையாறு, இடுக்கண் போன்ற மன உணர்வுகள் அல்லது மெய்ப்பாடு ஆகும். இவற்றை நோக்கின் இன்ன இன்ன நிகழ்ச்சிகளாலும், சூழ்நிலைகளாலும் சுவை பிறக்கும் என்று கூறப்படவில்லை என்பதை அறியமுடிகிறது.

**களவுக்குரிய மெய்ப்பாடுகள்**

களவு கூறிய மெய்ப்பாடுகளாவனவற்றை பின்வருமாறு விளக்கப்படுகின்றது. அவை காட்சிக்குரிய மெய்ப்பாடுகள், வேட்கைக்குரிய மெய்ப்பாடுகள், உள்ளுதலுக்குரிய மெய்ப்பாடுகள், மெலிதலுக்குரிய மெய்ப்பாடுகள், ஆக்கம் செப்பலுக்குரிய மெய்ப்பாடுகள், நாணுவரை இறத்தலுக்குரிய மெய்ப்பாடுகள் என களவுக்குரிய மெய்ப்பாடுகளை வகைப்படுத்துவர்.

**காட்சிக்கு உரிய மெய்ப்பாடுகள்**

**"புகுமுகம் புரிதல் பொறி நுதல் வியர்த்தல்**
**நகுநய மறைத்தல் சிதைவு பிறர்க்கு இன்மையொடு**
**தகுமுறை நான்கே ஒன்று எனமொழிப" (தொல். பொருள். மெய்.நூ.13)**

காட்சி என்பதன் முதல் அவத்தைக்குரியவனாகக் குறிப்பிடப் பெறுவன இம்மெய்ப்பாடுகள். இவை ஐங்குறுநூற்றுப் பாடல்களில் காணப்பெறவில்லை.

**வேட்கைக்குரிய மெய்ப்பாடுகள்**

கூழை விரித்தல், காது ஒன்று களைதல், ஊழ்அணிதைவரல், உடை பெயர்த்து உடுத்தலென்னும் இந்நான்கு மெய்ப்பாடுகளும் (தொல். பொருள். மெய். நூ.14) இரண்டாம் அவத்தைக்குரியனவாகும். இம்மெய்ப்பாடுகளும் ஐங்குறுநூற்றில் இடம்பெறவில்லை.

**உள்ளுதலுக்குரிய மெய்ப்பாடுகள்**

மூன்றாம் அவத்தைக்குரிய அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல், இல் வலியுறுத்தல், இருகையும் எடுத்தல் (தொல்.பொருள். மெய்.நூ.15) எனும் நான்கும் இடைவிடாது நினைத்தலுக்குரிய மெய்ப்பாடுகளாகும். இம்மெய்ப்பாடுகள் இடம்பெறும் பாடல்கள் ஐங்குறுநூற்றில் காணப் பெறவில்லை.

**மெலிதலுக்குரிய மெய்ப்பாடுகள்**

மெலிதல் எனும் நான்காம் அவத்தைக்குரிய மெய்ப்பாடுகளாகப் பாராட்டெடுத்தல், மடம் தப உரைத்தல், ஈரம் இல் கூற்றம், ஏற்று அலர் நாணல், கொடுப்பவை கோடல் (தொல்.பொருள்.மெய்.நூ.16) என்பனவற்றைச் சுட்டுவார் தொல்காப்பியர். கொடுப்பவை கோடல் எனும் மெய்ப்பாட்டுடன் பொருந்திய பாடல் என்று ஐங்குறுநூற்றில் இடம்பெற்றுள்ளது.

**" அன்னாய் வாழி வேண்டு அன்னை என்னை**
**தானும் மலைந்தான் எமக்கும்தழை ஆயின"** **(ஐங். 201:1-2)**

என்ற இப்பாடலடிகளில் அவன் கையுறையாகத் தந்த அவன் நாட்டுத் தழையை ஏற்றுக்கொண்டதனை அறிவிக்க எமக்கும் தழையாயின என்றாள் எனும் விளக்கம் தலைவியின்

பொருட்டுத் தோழி கையுறை ஏற்றமை குறித்துப் புலப்படுத்துகிறது. இதுவன்றிப் பிற மெய்ப்பாடுகள் ஐங்குறுநூற்றில் இடம் பெறவில்லை.

**ஆக்கஞ்செப்பலுக்குரிய மெய்ப்பாடுகள்**

தெரிந்துடன்படுதல், திளைப்பு வினை மறுத்தல், கரந்திடத்து ஒழிதல், கண்டவழி உவத்தல் (தொல்.பொருள். மெய்.நூ.17) எனும் மெய்ப்பாடுகள் ஆக்கஞ் செப்பலுக்குரியவை என்பர்.

**"அம்ம வாழி தோழி நலம் மிக**
**நல்ல ஆயின அறிய மென் தோளே**
**மல்லல் இருங் கழி மல்கும்**
**மெல்லம் புலம்பன் வந்த மாறே"** (ஐங். 120)

என்ற இப்பாடல், நம் காதலன் தான் சொன்னபடியே நம்மை நாடி வந்தமையால் இதுகாறும் மெலிவுற்றிருந்த என்தோள்கள், தலைவனைக் கண்டதும் அவன் வந்ததும் முன்பிருந்ததை விட மிகுந்த அழகினைப் பெற்றுப் பொலிவும் பெற்றன என்பது பொருளாகும்.

**"கோடு புலம் கொட்ப கடல் எழுந்து முழங்க**
**பாடு இமிழ் பரிந்துறை ஓடுகலம் உகைக்கும்**
**துறைவன் பிரிந்தென நெகிழ்ந்தன**
**வீங்கின மாதோ - தோழி- தோழி - என் வளையே"** (ஐங். 192)

என்ற இப்பாடலில் திருமணத்திற்கு வேண்டிய பொருளீட்டச் சென்ற தலைவன் மீண்டமை குறித்த தன் மகிழ்ச்சியை தலைவன் பிரிந்தமையால் முன்னர் நெகிழ்ந்து ஓடிய வளைகள் இப்பொழுது மீண்டும் செறிவுற்றன என்பது இப்பாடலின் பொருளாகும். இவ்விரண்டு பாடல்களும் பிரிந்திருந்த தலைவனைக் கண்ட தலைவியின் மன மகிழ்ச்சியை புலப்படுத்துகின்றன. எனவே மேற்குறித்த இரண்டு பாடல்களும் கண்டவழி உவத்தல் எனும் மெய்ப்பாட்டிற்குரியவையாய் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

**நாணுவரை இறத்தலுக்குரிய மெய்ப்பாடுகள்**

**"புறம் செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்**
**கலங்கி மொழிதல் கையறவு உரைத்தல்**
**விளம்பிய நான்கே ஆறு என மொழிப"** (தொல்.பொருள்.மெய்.நூ.18)

என்பர் தொல்காப்பியர். இவை ஆறாம் அவத்தைக்குரிய மெய்ப்பாடுகளாகும். இம்மெய்ப்பாடுகள் இடம்பெறும் ஐங்குறுநூற்றுப் பாடல்களைக் காண இயலவில்லை.

**"வீனை உயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே"** (தொல்.பொருள்.மெய்.நூ.20)

என்னும் நூற்பா வழி தலைவன் மீது கொண்ட காதல் காரணமாக ஆற்றாமை மிகுந்து உயிர்மெலிவடையும் தலைவியிடத்து மேற்கூறிய இருபத்து நான்கு மெய்ப்பாடுகள் இல்லாமலும் அமையும் என்றும் தொல்காப்பியர் கூறுவர். எனவே, இம்மெய்ப்பாடுகள் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்பதில்லை என்பது தெளிவாகிறது.

**கற்பில் நிகழும் மெய்ப்பாடுகள்**

இவை வரைந்தெய்தியபின் தலைமகள் கண் நிகழும் மெய்ப்பாடுகள் ஆகும். இவற்றை,

**" தெய்வம் அஞ்சல் புரையறம் தெளிதல்**
**இல்லது காய்தல் உள்ளது உவர்த்தல்**
**புணர்ந்துழியுண்மை பொழுது மறுபக்கம்**
**அருள்மிகவுடைமையன்பு தொகா நிற்றல்**
**பிரிவு ஆற்றாமை மறைந்தவை யுரைத்தல்**
**புறஞ்சொல் மாணாக் கிளவியோடு தொகைஇச்**
**சிறந்த பத்தும் செப்பிய பொருளே"** **(தொல்.பொருள். மெய்.நூ.24)**

எனத் தொல்காப்பியர் கூறுவர்.

**தெய்வம் அஞ்சல்**

சூள் பொய்த்தல், பரத்தையர் கூட்டம் முதலிய தலைவன் தவறுகளுக்குக் கடவுள் அணங்குமெனத் தலைவி அஞ்சுதல், தெய்வம் தொழாது கணவற்றொழுவதே நல்லில்லாட்டியார் தொல்லறமாதலின், தெய்வம் பரவுதல் என்னாது அஞ்சல் என்று அமையக் கூறப்பட்டதென்பர் ந.சுப்புரெட்டியார்".[5]

**"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை**
**யறுகழிச் சிறு மீனார மாந்துந்**
**துறைவன் சொல்லிய சொல்லே**
**னிறையே சொல்வளை கொண்டு நின்றதுவே"** **(ஐங். 165)**

எனும் பாடல் தெய்வமஞ்சல் எனும் மெய்ப்பாட்டிற்குச் சான்றாக அமைந்துள்ளது.

உடல் மெலிவுற்ற தலைவியிடம் அதற்கான காரணம் பரத்தையர் என்பது குறித்து வினவுகிறாள் தோழி. அவளுக்கு பதில் உரைக்கும் தலைவி களவு காலத்தில் நின்னைப் பிரியேன் எனத் தலைவன் சூளுரைத்தான். இன்று அச்சூள் பொய்த்தானாதலின் அதன் பொருட்டு தெய்வத்தான் அவனுக்கும் கேடுண்டாகுமோ என அஞ்சுவதால் என் உடல் மெலிகின்றது வளை கழல்கின்றது. இதற்கேயன்றி அவன் பரத்தமைக்கன்று என்பது மேற்பாடற் கருத்து. இதே கருத்தமைந்த மெய்ப்பாட்டைக் கொண்ட பாடலையும் ஐங்குறுநூற்றில் (43) காணமுடிகிறது.

**புரையறந்தெளிதல்**

தனக்கொத்த இல்லறம் இன்னதென்று தலைமகள் மனத்துப்படுதல் அது என்று பேராசிரியரும், கடன் மிக்கனவே என்ற வழி பரத்தமை கண்டு புலவாது இதனைப் போற்றல் இல்லுறை மகளிர்க்கியல்பென்னும் அறத்தினானே எனக் கூறியவாறு கண்டு கொள்க என இளம்பூரணரும் இம்மெய்ப்பாட்டை விளக்குவர். இவ்விளக்கங்களின் வழி தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைப் பொறுத்துக்கொண்டு இல்லறம் பேணலே புரையறந்தெளிதல் எனும் மெய்ப்பாடெனல் பொருந்தும். இம்மெய்பாடமைந்த பாடல்களை ஐங்குறுநூற்றில் காணமுடிகிறது.

**"அம்ம வாழி தோழி யான் இன்று**
**அறனிலாளற் கண்ட பொழுதில்**
**சினவுவென் தகைக்குவென் சென்றனென்**
**பின் நினைந்து இரங்கிப் பெயர் தந்தேனே"** **(ஐங். 118)**

என்ற இப்பாடல் தலைவியின் உளப்பாங்கைக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

தோழி, தலைவனைக் கண்டதும் அவனொடு ஊடுவேன், இல்லத்திற்குள் புகாது தடுப்பேன் என்று உறுதிகொண்டு அவன் முன் சென்றேன். ஆயின், உலக இயல்பு கருதி மனமிரங்கி அந்த உறுதி தளர்வுற்று மீண்டேன் என்கிறாள் தலைவி.

**"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை**
**இருங்கழி இனக் கெடிறு ஆரும் தலைவன்**
**நல்குவன் போலக் கூறி**
**நல்கான் ஆயினும் தொல்கேளன்னே"** **(ஐங். 167)**

என்ற இப்பாடல் பெருங்கடற் கரையின் கண் வாழும் சிறுவெண் காக்கை கரிய கழியிடத்தே வாழும் கெடிற்றினத்தின் வயிரார உண்ணுவதற்கு இடான துறைவன்தான் அருளுடையவன் போல முன்பு பேசிப் பின் அதற்கு மாறாகத் துயர் செய்தனன் ஆயினும் அவன் நமக்குப் பலபிறவிகளிலும் உறவாகிய கிழமை உடையவனேயாவான் என தலைவனின் பரத்தையொழுக்கத்தின் பொருட்டு அவனைப் பழித்த தோழிக்குப் பதிலுரைக்கிறாள் தலைவி.

மேற்காட்டிய இருபாடல்களும் தலைவன் பரத்தையர் ஒழுக்கம் ஒழுகுபவனாயினும், தலைவி இல்லறமாண்பு கருதி, உலகியல் கருதி அதனைப் பொறுத்தருள்பவளாய் விளங்குவதைக் காட்டுகின்றன. எனவே புரையறந்தெளிதல் எனும் மெய்ப்பாட்டிற்குப் பொருத்தமான சான்றாய் மேற்குறிப்பிடப்பட்ட பாடல்கள் அமைந்துள்ளன.

**இல்லது காய்தல்**

களவின்கட் போலாது தலைமகற்கு இல்லாததனை உண்டாக்கிக் கொண்டு காய்தல் அது என விளக்கம் கூறுகிறார் பேராசிரியர்.

**"செந்நெல் அம்செறுவில் கதிர்கொண்டு களவன்**
**தன்னக மண் அளைச் செல்லும் ஊரற்கு**
**எல்வளை நெகிழச் சாஅய்**
**அல்லல் உழப்பது எவன் கொல் அன்னாய்"** **(ஐங்.27)**

தலைமகன் மனைக்கண் வருங்காலத்து வராது தாழ்ந்துழி புறத்தொழுக்கம் உளதாயிற்று எனக் கருதி வருந்தும் தலைமகட்குத் தோழி சொல்லியது எனும் கூற்றில் அமைந்த இப்பாடல் தலைவன் தன் கடமையின் பொருட்டு வெளியே சென்று கடமைக்கண் கருத்தூன்றியிருந்தமையின் காலம் தாழ்ந்து வீடு திரும்பினானாக தன் அன்பு மிகுதியால் தலைவன்பால் புறத்தொழுக்கம் உளதாக ஐயுற்று வருந்தினாள் எனக் கூறுவதன் அடிப்படையில் இல்லது காய்தல் எனும் மெய்ப்பாட்டிற்குச் சான்றாக அமைகின்றது.

**அன்பு தொகா நிற்றல்**

தலைவன் எத்தன்மையனாயினும் அதனைப் பொருட்படுத்தாது அவன் மீது அன்பு கொண்டு ஒழுகுதல் இது. இம்மெய்ப்பாட்டிற்கு,

**"நல்குவன் போலக் கூறி**
**நல்கான் ஆயினும் தொல்கேளன்னே"** **(ஐங். 167)**

எனும் பாடலடிகள் சான்றாகின்றன.

**பிரிவாற்றாமை**

தலைவன் பிரிந்துசென்ற காலை ஆற்றாமை கொண்டிருத்தல் இம்மெய்ப்பாடு ஐங்குறுநூற்றில் பாலை, முல்லைத் திணை சார்ந்த பாடல்களில் காணப்படுகின்றன. சில சான்றுகள் பின்வருமாறு இதனை,

**"பெருஞ்சின வேந்தனும் பாசறை முனியான்**
**இருங்கலி வெற்பன் தூதும் தோன்றா**
**ததை இலை வாழை முழுமுதல் அசைய**
**இன்னா வாடையும் அலைக்கும்**
**என் ஆகுயென் கொல் அளியென் யானே"** (ஐங். 460)

இப்பாடல் வேந்து வினையின் பொருட்டு பிரிந்து சென்ற தலைவன் குறித்த பருவம் வந்த பின்னும் வராமையால் ஆற்றாமை கொண்டு உறையும் தலைவி கூறுவதாக அமைந்துள்ளது.

**"அம்ம வாழி தோழி சிறியிலை**
**நெல்லி நீடிய கல்காய் கடத்திடை**
**பேதை நெஞ்சம் பின்செல சென்றோர்**
**கல்லினும் வலியர் மன்ற**
**பல் இதழ் உண்கண் அழப்பிரிந்தோரே"** (ஐங். 334)

எனும் பாடல் தலைவன் வெயிலினால் கற்கள் சூடேறிக்கிடக்கும் காட்டினூடே சென்றான். அவன் பின்னால் அத்தகைய கொடிய வழியில் என் நெஞ்சம் பின்தொடர மையுண்ட என்கண்கள் அழுமாறு பிரிந்த எம் காதலர் மெய்யாகவே கல்லைக் காட்டிலும் வலிய இதயத்தைக் கொண்டவர் எனத் தலைவன் பொருள்வயிற் பிரிந்தமையில் ஆற்றாமை வெளிப்படத் தலைவி ஆற்றாமை கூறுவதாக அமைந்துள்ளது. எனவே பொருள்வயிற் பிரிவு, வினைவயிற் பிரிவு என இருவகைப் பிரிவிலும் தலைவியின் ஆற்றாமையில் உழல்வாள் என்பதும் அவ்வுணர்வு மெய்ப்பாடாய் சுட்டப் பெற்றுள்ளதென்பதும் விளங்குகின்றது.

**முடிவுரை**

மெய்ப்பாடுகள் அக இலக்கியங்களில் மாந்தர்களின் உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தும் அடிப்படையான உத்தியாக விளங்குவன சங்க நூல்களில் வரையறுத்து காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக சங்க இலக்கியங்களைப் புரிந்துகொள்ள பெரிதும் துணை செய்யும். தொல்காப்பிய மெய்ப்பாடு குறித்து விரிவாகவும் விளக்கமாகவும் இலக்கியங்களில் அவை பெருமிடத்தையும் அன்பின் ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகள் தொல்காப்பியத்தில் வகைப்படுத்தியுள்ளனர். குறிப்பாக அன்புக்குரிய எனும் அடிப்படை மெய்ப்பாடுகள் ஐங்குறுநூற்றில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதை ஆராய்ந்து விளக்கும் இக்கட்டுரை அவை தொல்காப்பியர் கூறியுள்ள படி முழுமையாக இடம் பெற்றுள்ளன என்பதையும் பொருத்தமான சான்றுகளின் வழி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்பு**

1. இளம். தொல்.பொருள். மெய். உரை, ப.345
2. பேரா.தொல்.பொருள். மெய். உரை, ப.165

3. மேலது, ப.166

4. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள், ப.86

5.இளம். தொல்.பொருள். மெய். உரை, ப.371

**பார்வை நூல்கள்**


1. பொ.வே.சோமசுந்தரனார், ஐங்குறுநூறு மூலமும் உரையும், கழகப் பதிப்பு, சென்னை, 2009.
2. பேராசிரியர், தொல்காப்பியம் - பொருளதிகாரம், தொகுதி - 1, 2, தமிழ் மண் பதிப்பகம், சென்னை, 2003.
3. தமிழண்ணல் - சங்க இலக்கிய ஒப்பீடு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை 1985
4. இளம்பூரணர் - தொல்காப்பியம் - பொருளதிகாரம் உரை, சாரதா பதிப்பகம், சென்னை 2005.


## References


1. Somasundranar P.V, Aingurunuru Mulamum Uraiyum, Kazhaga Pathippu, Chennai, 2009
2. Perasariyar, Tholkappiyam – Porulathikaram, Thoguthi – 1, 2, Thamizh Man Pathippagam, Chennai, 2003
3. Thamizhannal, Sanga Ilakkiya Oppidu, Meenachi Puththaga Nilaiyam, Madurai, 1985
4. Ilampuranar, Tholjappiyam – Porulathikaram Urai, Saratha Pathippagam, Chennai, 2005


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**அ.ரேவதி “ ஐங்குறுநூற்றில் களவு கற்புக்குரிய மெய்ப்பாடுகள் ”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 2, ஏப்ரல் 2022, பக். 01-08

## Cite this Article in English

A.Revathi “ **Kalavu Karpu Meipadugal in Ainguruntru”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 2, April 2022, pp. 01-08